பக்கங்கள்: 09

காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 06 திங்கட்கிழமை 21.12.2020 கதிர் 276

## கைதிகளை அச்சுறுத்தும் சிறைச்சாலை கொத்தணி

**இதுவரை 3,414 பேருக்குத் தொற்று உறுதி**

இலங்கையில் சிறைச்சாலை கொத்தணியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுபவர்களது எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

அந்தவகையில் இன்றும் சிறைச்சாலை கொத்தணியில் 42 பேருக்குத் 2☞

# அளப்புகின்றார் சுமந்திரன்!





## விக்கி பதிலடிக் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 21**

**ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் மார்ச் மாத அமர்வைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஐக்கியப்பட்டுக் கையாளும் முயற்சியை ஒட்டிய விடயத்தில் கஜேந்திர குமார் எம்பியும், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பியும் விஷமத்தனமான பொய்ப் பிரசாரம் செய்கின்றனர் எனக் கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி சுமத்திய குற்றச்சாட்டுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் பதிலடி தந்திருக்கின்றார்.**

**சுமந்திரன்அளப்புகின்றார், என்று அவர் குற்றம் சுமத்துகின்றார்.** 2☞

## தமிழருக்கு அதிகாரப் பகிர்வு வேண்டாம் என்ற நிலைப்பாட்டிலேயே சரத் வீரசேகர

### இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் விக்கி

**(எஸ்.நிதர்ஷன்)**

தமிழ் மக்களுக்கு எந்தவிதமான அதிகாரப் பகிர்வையும் கொடுத்துவிடக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அமைச்சர் சரத் வீரசேகர இருக்கின்றார் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாண சபை முறைமை தேவையற்றது என சரத் வீரசேகர போன்றோர் குறிப்பிடும்போது, அரசில் அங்கங்கம் வகிக்கும் வேறு சிலர், மார்ச் அல்லது 2☞

## யாழ். மாநகர சபை புதிய மேயர் யார்?

### 30ஆம் திகதி தெரிவு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையும் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநகர சபையின் புதிய மேயர் தெரிவு எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை நடை 2☞

## கிளிநொச்சி -அறிவியல் நகரில் ரி - 56 ரக துப்பாக்கிகள் 5 சிக்கின

### 30 ரவைகளும் மீட்பு



கிளிநொச்சி - அறிவியல்நகர் காட்டுப் பகுதியில் பயன்படுத்த முடியாத நிலையிலான ரி - 56 ரக துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் புதைத்து 2☞

### ஒரு லட்சம் வேலை வாய்ப்பில்

## வடக்கில் பின்கதவால் நியமனம்!

**ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிசெ.22

ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் இரண்டாவது கட்ட நியமனம் வழங்கும் வகையில் உறுதி செய்ய அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர் பட்டியலில் வேலை வாய்ப்பிற்காக முன்னர் விண்ணப்பிக்காத பலரின் பெயர்கள் உள்ளன என அதிர்ச்சித் தகவல் வெளியிடப்படுகின்றது.

நாடு முழுவதும் உள்ள வேலை வாய்ப்பற்ற - அரச தொழில் புரியாத குடும்பங்களில் இருந்து மிகவும் வறுமையானவர்களுக்கு - அரச நியமனம் வழங்கப்படும் என 2☞

## தமிழகத்தில் இருந்து வந்த ஐவர் மன்னார் பொலிஸில்!



**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிசெ.21

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து தப்பி வந்த ஐவர் நேற்றைய தினம் மன்னார் கரையை வந்து அடைந்தபோது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். 2☞

## வவுனியாவில் வீதியோர வியாபாரத்துக்குத் தடை!



வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் 2☞

## ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைத் திறப்பது தொடர்பான கல்வி அமைச்சின் அறிவித்தல்




கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ள முன்பள்ளிகளையும் மற்றும் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளையும் மீள ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில், எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதி முதல் முன்பள்ளிகளும், தரம் ஒன்று முதல் 5 வரையான ஆரம்பப் பிரிவு பாடசாலைகளும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். 2☞

## இந்தியாவிலிருந்து வந்து திரும்பிய ஈழ அகதி தனுஷ்கோடியில் கைது!



**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,டிசெ.22

இந்தியாவில் இருந்து 2019 ஆம் ஆண்டு படகு மூலம் இலங்கைக்குள் நுழைந்தவர் நேற்றைய தினம் 2☞

## ஆயிரம் ரூபா குறித்து இறுதி முடிவு இல்லை; கூட்டு ஒப்பந்தப் பேச்சு மீண்டும் ஒத்திவைப்பு



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை நிர்ணயிக்கின்ற கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சு இன்று தொழில் அமைச்சில் நடைபெற்றது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் 2☞

## ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைத் திறப்பது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில், இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்று நிலைமையால் கடந்த ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் முன்பள்ளிகளும், அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டதுடன், அதன்பின்னர் நவம்பர் 23 ஆம் திகதி முதல் மேல் மாகாணம் தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில் தரம் 6 முதல் 13 வரையான வகுப்பு மாணவர்களுக்காக மாத்திரம் பாடசாலைகள் திறக்கப்பட்டன.

ஆனபோதும் பாடசாலைகள் திறக்கப்பட்ட சில பிரதேசங்களில் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக அந்தப் பாடசாலைகள் மீண்டும் மூடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்ட கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்,

தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றும் மீண்டும் திறக்கப்பட்டு மூடப்பட்ட பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். இது தொடர்பாக பின்னர் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எவ்வாறாயினும் மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை இப்போதைக்குத் திறக்க முடியாத நிலைமையே காணப்படுகின்றது - என்றார்.

இதேவேளை, எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு மூன்றாம் தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் வீதியோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்தில்கொண்டு வவுனியா நகர சபையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத் தடை விதிப்பதாக நகர சபையால் அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை நகர சபையினர் அகற்றும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்

இதன்படி வீதியோரங்களில் மரக்கறி வர்த்தக நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (100)

## இந்தியாவிலிருந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீண்டும் படகு மூலம் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்ட போரின் போது தமிழகத்திற்கு அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி இருந்த முஜிபூர் ரகுமான் கடந்த 2019 டிசெம்பர் மாதம்

25ஆம் தேதி சட்டவிரோதமாக படகு மூலமா இலங்கைக்கு மீண்டிருந்தார். அவர் இங்கு இலங்கை மன்னார் மாவட்டம் பேசாலையில் தங்கியிருந்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வந்து ஓர் ஆண்டுக்குள் மீண்டும் சட்ட விரோதமாக கடல் வழியாக படகு மூலம் தனுஷ்கோடி சென்றுள்ளார்.

அங்கு இவரைக் கைது செய்த இந்திய உளவுத்துறை அதிகாரிகள் மண்டபம் முகாமில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆயிரம் ரூபா குறித்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துகொண்டார்.

இதன்போது முதலாளிமார் சம்மேளனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையில் தொழிலாளர்களுக்குப் பாதகமாகவுள்ள விடயங்களை நீக்குவது பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. ஆனாலும், ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பில் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. இதனால் பேச்சு மீண்டும் டிசெம்பர் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தமக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வேண்டும் எனத் தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவை அரசும் முன்வைத்துள்ளது. எனினும், அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படுமா என்பது பற்றி எதுவும் நடைபெறவில்லை. அதேவேளை, ஆயிரம் ரூபா எவ்வாறு கிடைக்கும் என்பது பற்றி கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் எதையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி -அறிவியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைக்கப்பட்டிருந்த நிலையில், அண்மையில் பெய்த மழையின்போது அவை வெளியே வந்துள்ளது.

அதைத் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பில் தகவலறிந்த விசேட அதிரடிப் படையினர் அவற்றை இன்று மீட்டுள்ளனர்.

இதன்போது ரி - 56 ரக துப்பாக்கிகள் 5 மற்றும் ரவைகள் 30 மீட்கப்பட்டுள்ளன. இவை, தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்தி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மேலும், மீட்கப்பட்ட பொருள்களை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் பின்கதவால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவிக்கப்பட்டதன் பெயரில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பதாரிகளிற்கு நேர்முகத் தேர்வும் இடம்பெற்றது. அதில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் நியமனம் கிடைக்கும் என நம்பிக் காத்திருக்கின்றனர்.

இரண்டாம் கட்ட நியமனத்திற்காக பலரின் விண்ணப்பம் செயலணியினால் கடந்த வாரம் மாவட்டச் செயலகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் அதிகமானவை புதிய விண்ணப்பங்களாகவே காணப்படுகின்றமையோடு சில பழையவையாகவும் உள்ளன.

இதனால் ஏற்கனவே விண்ணப்பித்து தேர்வில் முதல் நிலை பெற்றவர்கள் ஓரம் கட்டப்பட்டு அரசியல் கட்சிகளின் செல்வாக்குப் பெற்றவர்களின் பெயர் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர் பட்டியல்களில் யாரின் சிபார்சில் வருகின்றன என்பது பென்சிலினால் எழுதப்பட்டே அனுப்பப்படுகின்றது. இவ்வாறு அனுப்பி உள்ள பட்டியல்கள் அரசிற்கு யாழில் ஆதரவளிக்கும் இரு அரசியல் கட்சிகளின் சிபார்சின் பெயரிலேயே புதியவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனவாம்.

இதன் காரணமாக ஏற்கனவே விண்ணப்பித்து நேர்முகத் தேர்விற்கு தோற்றிய பலர் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## தமிழகத்தில் இருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக படகுகள் மூலம் உயிர் தப்பி இந்தியாவிற்கு ஓடிய ஈழ அகதிகளில் பலர் தம்மை கப்பல் மார்க்கமாக நாட்டிற்கு திருப்பியனுப்புமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதும் இதுவரை அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால் பலர் படகு மூலமே மீண்டும் நாட்டிற்குள் பிரவேசிக்கின்றனர்.

இவ்வாறு நேற்றைய தினமும் ஓர் படகு மூலம் ஐவர் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளனர். இவ்வாறு படகில் வந்து இறங்கியவர்களில் முத்துராமு கலைச்செல்வன் (புத்தளம்), அமாதுல்லா பாத்திமா சுபா (மன்னார் - புத்தளம்), அந்தோணிப்பிள்ளை யுகதாஸ் (சூசைப்பர் கோவிலடி, கோப்பாய் வடக்கு, (தர்மலிங்கம் ஜெயசீலன் (பொல்காவலை), சுமையோன் பிரிஸ் செல்ரன் பீரிஸ் (பூந்தோட்டம், வவுனியா) ஆகிய ஐவருமே இவ்வாறு படகு மூலம் மன்னாரை அடைந்தனர்.

மன்னாரை வந்தடைந்த இந்த ஐவரும் தற்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## யாழ். மாநகர சபை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெறவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சன் இதற்கான அறிவித்தலை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகக் கடந்த 16ஆம் திகதி, மாநகர மேயர் இம்மானுவல் ஆனோல்ட்டால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 21 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 3 வாக்குகளினால் அது தோற்கடிக்கப்பட்டது.

இதனால், சட்ட ஏற்பாடுகளுக்கமைய மேயர் ஆனோல்ட் பதவியை இழக்க நேரிட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாநகர சபைக்குப் புதிய மேயர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பவற்றில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுடனும் (ஈ.பி.டி.பி.) நாம் நேரில் பேச்சு நடத்தவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழருக்கு அதிகாரப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏப்ரல் மாதமளவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது எனத் தெரிவித்து வருகின்றனர்.

'இலங்கை சிங்கள நாடு, தமிழ் மக்களுக்கென்று எந்தவிதமான அதிகாரப் பகிர்வும் வழங்கப்படக் கூடாது' என்ற சரத் வீரசேகரவின் கருத்து பிழையானது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் எந்தக் காலத்திலும் பெரும்பான்மையாக இருந்ததில்லை.

அமைச்சர் சரத் வீரசேகர இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதால், இலங்கை மக்களிடையே சௌஜன்யமும், நல்லுறவும் ஏற்படாது.

மேலும், அவருடைய கருத்தை வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் முடியாது - என்றார்.

## கைதிகளை அச்சுறுத்தும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இதுவரை சிறைச்சாலை கொத்தணியில் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 3 ஆயிரத்து 414 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அளாப்புகின்றார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் இன்று அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

திரு.ஏ.சுமந்திரன் அவர்கள் சிலரை எல்லா காலத்திலும் முட்டாள்கள் ஆக்கலாம். பலரை சில காலம் முட்டாள்கள் ஆக்கலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் முட்டாள்கள் ஆக்கமுடியாது. அதுவும் அவருக்கு சட்டம் படிப்பித்த ஆசிரியரை முட்டாளாக்கப் பார்ப்பது குருத்துரோகம் ஆகும்.

நானும் கஜேந்திரகுமாரும் பொய் சொன்னதாகக் கூறியுள்ளார். அவர் கூறுவது சரியா அல்லது கஜேந்திரகுமாரும் நானும் கூறுவது சரியா என்பதை அவரால் எம்மிடம் கையளிக்கப்பட்ட கடித வரைவை மொழிபெயர்த்தால் தெரிந்துவிடும். அவர் அனுமதி அளித்தால் குறித்த கடிதத்தை மொழி பெயர்த்துக் கொடுக்க முடியும்.

அதில் தமது சிபார்சுகள் என்று கூறி முதலில் அவர் அங்கு கூறியிருப்பது இலங்கை உட்பட ஒரு தடவை அல்ல மூன்று தடவைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அங்கத்தவர்கள் யாவரினதும் சம்மதத்துடன் இயற்றியது போன்ற ஒரு கூட்டத் தீர்மானத்தை 2021ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயற்ற வேண்டும் என்பதே. அதாவது முன்னர் மூன்று முறை காலக்கெடு அளித்தது போல் மேலும் ஒரு முறை காலக்கெடு அளிக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தம்.

இதில் எந்த மயக்கமும் இல்லை.

அவர் தமது சிபார்சுகளின் பின்னர் அதாவது சிபார்சுகளுக்கு அப்பால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர்களினால் முன்னர் செய்த காரியங்களை அவர் குறிப்பிடுகின்றார். அதில் சிரியா பற்றியும் மியன்மார் பற்றியும் குறிப்பிடுகின்றார். ஆனால் அந்த நாடுகள் சம்பந்தமாகச் செய்தது போல் இலங்கை சம்பந்தமாகவும் பொறிமுறைகளை இயற்றுங்கள் என்று எங்குமே அவர் கூறவில்லை. இதைத்தான் 'அளாப்பிறது' என்று கிராமங்களில் கூறுவார்கள். சுமந்திரன் அளாப்புகின்றார்!

ஆனால் எம்மிடம் இருந்து பதில் வர முன்னரே குறித்த கடிதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கும் ஏனையோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக அறிகின்றேன். எம்மிடம் எமது கருத்துக்களைக் கோரிவிட்டு அதற்கு முன்னர் குறித்த கடிதம் அனுப்பப்பட்டிருந்தால் அது வருத்தத்திற்குரியது. ஆனால் இப்பொழுதும் அனைவரின் சம்மதத்துடன் புதியதொரு வரைவை அனுப்பலாம். அத்துடன் மைய நாடுகளுடனும் பேசவேண்டியிருக்கின்றது. அடுத்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கின்றீர்கள். பொதுவாக இரண்டு விடயங்களைப் பலர் அடையாளம் கண்டுள்ளார்கள்.

ஒன்று ஐ.சீ.சி.என்னும் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு இலங்கையைப் பாரப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் அல்லது இலங்கைக்கென நியமிக்கப்படும் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் முன் இலங்கையை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனைச் சம்பந்தப்பட்ட ஓர் அங்கத்துவ நாட்டின் ஊடாகச் செய்ய வேண்டும். அடுத்து சர்வதேச சுதந்திர விசாரணைப் பொறிமுறையொன்றை நிறுவி அதைக் கொண்டு இலங்கையில் நடந்த மிக ஆபத்தான சர்வதேசக் குற்றங்களையும் சர்வதேசச் சட்ட மீறல்களையும் பற்றிய சாட்சியங்களைச் சேகரித்து அவற்றை ஒன்றுபடுத்தி, பாதுகாத்து அவற்றை ஆய்வு செய்வதும் அவை தொடர்பாக உரிய கோவைகளைத் தயாரித்து சர்வதேசச் சட்ட முறைமைக்கேற்றவாறு நியமிக்கப்படும் நீதிமன்றங்களில் அல்லது தீர்ப்பாயங்களில் நடைபெறும் குற்றவியல் நடவடிக்கைகளில் அக் கோவைகளைச் சமர்ப்பித்து நீதியும் சுதந்திரமானதுமான விசாரணைகளை விரைவாக நடத்த அனுசரணை வழங்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

மேலும் சமாந்திரமாக சர்வதேச நீதி மன்றத்திற்கு இலங்கையைக் கொண்டு போவது பற்றியும் பரிசீலிக்கப்படவேண்டும்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஊடாக விசேட ஆய்வாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், காணி அபகரிப்பு போன்றவற்றைக் கண்காணிக்கவும் ஆராயவும் இவ்வாறான ஆய்வாளர் ஒருவரை நியமிக்கக் கோரலாம்.

அதுமட்டுமல்ல. ஒரு சுயாதீனமான விசாரணைப் பொறிமுறையொன்றையும் தாபித்து பொறுப்புக்கூறலையும் போக்குற்ற செயல்பாடுகளை ஆராயுமாறும் கோரலாம். இவை பற்றி எல்லாம் ஆராய வெளிநாட்டு சர்வதேசச் சட்ட வல்லுநர்களுடன் நான் தொடர்பில் இருக்கின்றேன். மைய நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. தமிழ் தரப்பார் யாவரும் சேர்ந்து ஒரு கோரிக்கை விடுத்தால் நாம் அதன்படி நடவடிக்கை எடுக்க முடியும் என்று ஜெனிவாவில் இருக்கும் பிரித்தானியத் தூதுவர் கூறியுள்ளார்.

ஆகவே நாங்கள் மேலும் கால அவகாசம் கொடுக்காது, **Roll Over** என்று முன்னைய கூட்டத் தீர்மானத்தையே பிறிதொரு முறை கொண்டுவராமல், இலங்கைக்கு எதிராக செய்ய வேண்டியவற்றை மைய நாடுகள் துணை கொண்டு செய்ய வேண்டும். அதற்கு சகல தமிழ்த் தரப்பாரும் ஆதரவு வழங்க முன்வர வேண்டும். எமது ஒற்றுமையே இந்தத் தருணத்தில் எமக்குப் பலமாகும். - என்று உள்ளது.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பகிரங்க மோதலால் ஐக்கியம் வராது

தமிழ் மக்களுக்குத் தமது தலைமுடியைத் தாமே பிய்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைத் தவிர, வேறு வழியில்லைப் போலும்.

ஐக்கியப்பட்டு விடயங்களை அணுகுங்கள் என்றால், *'ஒன்றுபட்டுச் செயற்படுவதுதான் உத்தமமானது'* என்று கூறிக் கொண்டே சம்பந்தப்பட்ட தரப்புகள் பகிரங்கமாக மோதுகின்றன; முரண்பட்டு நிற்கின்றன.

வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு அணுக வேண்டும், அணுகுங்கள் என்பது தமிழ் மக்கள் கோரிக்கை.

ஆனால் சம்பந்தப்பட்ட தரப்புகள் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறிப் பொது வெளியில் குற்றம் சுமத்துவதைப் பார்த்தால் இது ஆகிற காரியம் மாதிரித் தெரியவில்லை.

இலங்கை அரசுக்கு முன்னர் கால அவகாசம் பெற்றுக் கொடுத்தமை போன்ற ஒரு பிரேரணையைத்தான் மீண்டும் கொண்டு வருவதற்கு சுமந்திரன் முயல்கின்றார் என்று விக்னேஸ்வரன் பகிரங்க வெளியில் கருத்து வெளியிட –

விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமாரும் இது விடயத்தில் விஷமத்தனமான, பொய்ப் பிரசாரம் செய்கின்றனர் என சுமந்திரன் குற்றம்சுமத்த –

இந்த விடயத்தில் சுமந்திரன் அளாப்புகின்றார் என நீதியரசர் விக்னேஸ்வரன் பதிலடி தர –

ஊடகங்களின் காட்டில் நல்ல மழை. மாறி மாறி ஒருவரை ஒருவர் வசைமாரி பொழிவதை மக்கள் ரசனைக்குச் செய்தி விருந்தாகப் படைக்க நல்ல வாய்ப்பு.

ஆனால் கடைசியில் அடிபட்டுப் போகப் போவது என்னவோ ஒன்றுபட்ட தமிழ்த் தேசிய சக்தியாக எழும் தமிழர்களின் முயற்சியும், புறப்பலமாக சர்வதேச ஆதரவை நாம் திரட்டுவதற்கான வாய்ப்பும்தான்.

இது புரியாமல் – விளங்காமல் – அரசியல் அதிர்வேட்டுகள் மாறி மாறி முழங்கப்படுகின்றன.

சரி, இனி விடயத்துக்கு வருவோம். சுமந்திரனின் யோசனைத் திட்டம் தொடர்பாக விக்னேஸ்வரன் கூறும் குற்றச்சாட்டில் பின்வரும் விடயமே முக்கியமானதாகும்.

*"அதில் தமது சிபார்சுகள் என்று கூறி முதலில் அவர் (சுமந்திரன்) கூறியிருக்கின்றமை இலங்கை உட்பட ஒரு தடவை அல்ல மூன்று தடவைகள் முக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அங்கத்தவர்கள் யாவரினதும் சம்மதத்துடன் இயற்றியமை போன்ற ஒரு கூட்டத் தீர்மானத்தை 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயற்ற வேண்டும் என்பதே. அதாவது முன்னர் மூன்று முறை காலக்கெடு அளித்தமை போல் மேலும் ஒரு முறை காலக்கெடு அளிக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தம்."*

– இதுவே நீதியரசர் விக்னேஸ்வரனின் குற்றச்சாட்டு. ஆனால் உரிய ஆவணங்களைப் பார்வையிட்ட போது இத்தகைய கற்பிதம் தவறானது என்றே நமக்குத் தோன்றுகின்றது.

சுமந்திரன் முன்வைத்த ஏழு பக்கங்களைக் கொண்ட வரைவு, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களும் எவ்வித பயனும் அற்றுப் போய் விட்டன என்பதைத் தெளிவாகவும் விலாவாரியாகவும் விவரித்துள்ளது.

அதன் காரணமாக இந்தத் தீர்மானங்களுக்கு அப்பால் சென்று ஒரு தீர்மானத்தை (Adopt Further Resolution) நிறைவேற்ற வேண்டும் என்றே தனது பரிந்துரையில் அது கோருகின்றது. மேலும் அந்தப் பரிந்துரையில் –

அ) கடந்த பதினொரு ஆண்டுகளாகக் காலதாமதப்படுத்தும் தந்திரோபாயத்தையே இலங்கை கையாண்டு ஏமாற்றி வருகின்றது என்பதாலும் –

ஆ) யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்த தனது இராணுவத்தினருக்கு எதிராகப் பொறுப்புக் கூறும் நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கைக் கட்டமைப்புகள் செயல்திறனற்றவை என்பதாலும் –

இ) தான் வழங்கிய பல உறுதிமொழிகளை நிறைவு செய்வதில்லை என 2020 மார்ச்சில் இலங்கை மறுத்து விட்டதாலும் –

இப்போது நிறைவேற்றப்படும் புதிய தீர்மானத்துக்கு மேலதிகமாக சுயாதீனமான பொறுப்புக் கூறல் பொறிமுறை ஒன்றையும் உருவாக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

– இதுவே சுமந்திரன் முன்வைத்த நகல் வரைவில் உள்ளது.

இதில், பழைய தீர்மானத்தைப் போன்று காலக்கெடு வழங்கும் ஒரு தீர்மானம்தான் வலியுறுத்தப்படுகின்றது என்று அர்த்தம் கற்பிக்க வேண்டிய – கற்பிதப்படுத்தப்பட வேண்டிய – அம்சம் ஏதும் இருப்பதாகத் தெரிய வில்லை.

சுமந்திரனின் குரு என்று தம்மைப் பெருமிதத்துடன் குறிப்பிடும் மூத்த நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு, இது பழைய தீர்மானத்தின் மறுபிறப்பு முயற்சிதான் என்று தோன்றியிருந்தாலும் கூட, அதைப் பொது வெளியில் பேசுவதற்கு முன்னர், நேரடி உரையாடலில் அதைத் தெளிவுபடுத்திய பின்னர், மக்களிடம் வந்திருக்கலாம்.

மக்களுக்கு முன்னால், பொது வெளியில், மாறி மாறி வாதப் பிரதிவாதம் நடத்தித்தான் நீங்கள் மூன்று தரப்பினரும் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி) ஐக்கியப்பட்ட நிலைக்கு வருவீர்கள் என்று கருதுவீர்களாயின் அது நடக்கப்போகின்ற விவகாரமே அல்ல – மாறாக, நமது போன்ற ஊடகங்களுக்கு மாறிமாறி செய்தித் தீனி போடு வதைத் தவிர வேறில்லை.

# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவேன்!

## அத்துரலியே ரத்ன தேரர் உறுதி

கொழும்பு, நவ.21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தை பலப்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.

அபே ஜனபல வேகய கட்சி தீர்மானம்மிக்க அரசியல் கட்சியாக பலம் பெறும் என தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் அபேஜனபல வேகய கட்சி பல சவால்களுக்கு மத்தியில் சுமார் 69 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுக் கொண்டது.

அபேஜனபல வேகய கட்சி 5 தேர்தல் மாவட்டங்களில் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் அரசியல் சூழ்ச்சியின் காரணமாகவே இரத்து செய்யப்பட்டன.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இதுவும் நாங்கள் குறைவான வாக்குகளை பெறுவதற்கு ஒரு காரணியாக அமைந்தது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட 69 ஆயிரம் வாக்குகளுக்கு ஒரு தேசிய பட்டியல் ஆசனம் ஒதுக்கப்பட்டது.

இந்த ஒரு தேசிய பட்டியல் ஆசனம் அபே ஜனபல வேகய கட்சிக்குள் பாரிய முரண்பாட்டைத் தோற்றுவித்தது.



தேசிய பட்டியல் ஆசன முரண்பாட்டுக்கு தீர்வைக் காண நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்ற தீர்ப்பு எப்போது கிடைக்கும் என்று குறிப்பிட முடியாது. நாடாளுமன்றத்தில் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தில் வெற்றிடம் நிலவுவது 69 ஆயிரம். மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு முரணாகும்.

ஆகவே, இதற்குத் தீர்வைக் காணும் நோக்கில் அனைத்து மட்டத்திலும் பேச்சு முன்னெடுக்கப்பட்டது. தேசிய பட்டியல் ஆசனத்துக்கு என்னை தெரிவு செய்ய ஞானசார தேரர் உட்பட அனைவரும் இணக்கம் தெரிவித்தார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டம் தேசியத்துக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.

சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தை முழுமையாக செயற்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.– என்றார்.

# ஐஸ் உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் தீ விபத்து!





மட்டக்களப்பில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஐஸ் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு – கல்லடி பாலத்துக்கு அருகில் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஐஸ் தொழிற்சாலையிலேயே ஞாயிற்றுக்கிழமை மாலை, இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த ஐஸ் தொழிற்சாலை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்துக்கு அருகில் 2009 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு செயற்பட்டு வந்த போதும் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அது கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது.

இந்நிலையில் இந்த ஐஸ் தொழிற்சாலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பாகவும் தீ விபத்து ஏற்பட்டிருந்தது.

ஞாயிறு மாலையும் பலத்த மழைக்கு மத்தியிலும் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் அந்தத் தீயை மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

மேற்படி பகுதிக்கு வருகை தந்த மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், மாநகர ஆணையாளர் மா.தயாபரன் மற்றும் உறுப்பினர்கள் தீயணைக்கும் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெளிவிவகார அமைச்சினது அனுமதியின்றி வெளிநாட்டிலுள்ள இலங்கையர் நாடு வரலாம்!

விமான நிலையம் எதிர்வரும் 26 ஆம் திகதி திறந்த பின்னர் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வெளிவிவகார அமைச்சின் அனுமதியின்றி இனி நாட்டுக்கு வருகை தர முடியும் என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று பரவல் தீவிரமடைந்த காரணத்தால் கடந்த மார்ச் மாதம் முதல் விமான நிலையங்கள் மூடப்பட்டன. வெளிநாடுகளில் நெருக்கடிகக்குள்ளான இலங்கையர்கள், வெளிவிவகார அமைச்சின் அனுமதியை பெற்றே, நாட்டுக்கு இதுவரை அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் வழமை போன்று நாட்டுக்கு வருவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. எனினும், சுகாதார நடைமுறைகள் உரிய வகையில் கடைபிடிக்கப்படும்.

நாட்டுக்குள் வரும் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்க வேண்டும். விமான நிலையத்தில் 3 ஆயிரத்து 500 பி.சி.ஆர். பரிசோதனைகளை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு நாளைக்கு விமான நிலையத்தில் சுமார் 3 ஆயிரத்து 500 பி.சி. ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகைத் தரும் சுற்றுலா பயணிகளுக்கான சுகாதார வழிமுறைகள் தொடர்பில் உரிய தரப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## சமூக நல அறிவிப்பு

கொரோனா தொற்று நோய் பரவக்கூடிய ஆபத்துள்ள காலப் பகுதியில் உங்களுக்கு காய்ச்சல், தலையிடி, தொண்டைநோ, மூச்சு எடுப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் தென்படு மாயின், தாமதியாது சரியான முறையில் முகக் கவசம் அணிந்தவண்ணம் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று உண்மைத் தகவல் களைத் தெரிவித்து வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



# தொற்று வரலாமல் பாதுகாப்பாக இருந்தால் இறப்பில் இருந்து முற்றாக விடுபடலாம்



# ஒவ்வொரு நகர்வுகளையும் சமூக அக்கறையுடன் தீர்மானிப்போம்

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-

*With Best Compliment From .....*

# சசிகா லேணர்ஸ்

"அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை"

Reg. No - DS882

## THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தை கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்







**தலைமைக்காரியாலயம்**
இல. 57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
021 221 7578/7678
077 6140361, 077 722 6247
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com

**கிளை நிறுவனங்கள்**

| யாழ் மத்தி (Twon) | சாவகச்சேரி | மல்லாகம் | நெல்லியடி | சங்கானை | காரைநகர் | பண்டத்தரிப்பு | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|
| 021 222 8004 | 021 227 0616 | 021 224 3393 | 021 226 0999 | 021 225 1664 | 021 225 2454 | 021 225 2333 | 021 221 5472 |
| 070 3015004 | 071 557 0616 | 070 301 3014 | 071 775 0999 | 070 301 3016 | 070 510 2484 | 071 255 4135 | 070 301 3012 |

# ஈராக்கிலுள்ள அமெ. தூதரகம் மீது ஏவுகணைத் தாக்குதல் நடந்தது!



ஈராக்கில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்தை நோக்கி எட்டு ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன. மேலும், இந்த ஏவுகணைகள், ஈராக்கின் பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் வீழ்ந்து வெடித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனம் தெரியாத சட்ட விரோதக் கும்பல் ஒன்றால் ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்தை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணைகளே இவ்வாறு ஈராக்கின் பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் வீழ்ந்துள்ளன.

குறித்த ஏவுகணைத் தாக்குதல்களால் அப்பகுதியில் உள்ள கட்டடங்கள், கார்கள் என்பன சேதமாக்கப்பட்டுள்ள அதேவேளை, ஈராக்கின் இராணுவ உறுப்பினர் ஒருவரும் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த ஏவுகணைகளில் ஒன்று, ஏவுகணை திசை திருப்பும் ஆயுதத்தின் உதவியுடன் திசை திருப்பப்பட்டுள்ளதாக ஈராக் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த தாக்குதலுக்கு அமெரிக்க அரசாங்கம் தனது பலத்த கண்டனங்களை வெளியிட்டுள்ள அதேவேளை தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஈராக் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

மேலும், இந்தத் தாக்குதல் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ, ஈராக் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ள அதேவேளை குறித்த வீரர் மீண்டு விரைவாக வரவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

# முகக் கவசம் இல்லாமல் செல்பி எடுத்த சிலி ஜனாதிபதிக்கு அபராதம்!



முகக்கவசம் இல்லாமல் செல்பி எடுத்துக் கொண்டமைக் காக, தென் அமெரிக்க நாடான சிலி நாட்டு ஜனாதிபதி செபாஸ்டியன் பினேராவுக்கு 3 ஆயிரத்து 500 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடான சிலியில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பொது இடங்களில் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த விதிமுறையை மீறுபவர்களுக்கு அபராதம், சிறைத் தண்டனை ஆகியவை விதிக்க முடியும்.

இந்த நிலையில், தனது இல்லத்துக்கு அருகே உள்ள கடற்கரையில் சிலி ஜனாதிபதி, இளம் பெண்ணுடன் எடுத்துக்கொண்ட செல்பி சமூக வலைதளங்களில் பரவியது.

இதையடுத்து கொவிட் – 19 கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிய குற்றத்துக்காக செபாஸ்டியன் பினேராவுக்கு 3 ஆயிரத்து 500 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு மன்னிப்பு கோரியுள்ள செபாஸ்டியன், தனது இல்லத்துக்கு அருகே உள்ள கடற்கரையில் படம் எடுத்துக்கொள்ள அந்தப் பெண் கோரியபோது, முகக் கவசத்தைக் கழற்றியது தவறு என்று ஒப்புக் கொண்டார்.

தற்போது கொரோனா நோய்த்தொற்று பரவலைக் கட்டுப்படுத்தத் தவறினார் என அவரை எதிர்க் கட்சியினர் விமர்சித்து வரும் நிலையில், முகக் கவசம் இல்லாமல் பொது இடத்தில் படம் எடுத்துக் கொண்டமை மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# சட்டமன்ற உறுப்பினரை இலக்கு வைத்து ஆப்கானிஸ்தானில் குண்டுத் தாக்குதல்!



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், சட்டமன்ற உறுப்பினர் கான் மொஹம்மட் வர்டாக் – ஐ குறிவைத்து நடத்தப்பட்ட கார் குண்டு வெடிப்பில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், கான் மொஹம்மட் உட்பட 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்றதுடன் பலர் படுகாயமடைந்துள்ளமையால் இறப்பு எண்ணிக்கை உயரலாம் என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காபூலின் கோல் கான் சுற்றுப்புறத்தில் உள்ள சந்தி வழியாக சட்டமன்ற உறுப்பினர் கான் மொஹம்மட் மற்றும் பொலிஸார் சென்று கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பால் பொதுமக்களின் வாகனங்கள் தீப்பிடித்ததுடன் அருகிலிருந்த கட்டடங்களும் சேதமடைந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் உட்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், தலிபான்கள் கடந்த மூன்று மாதங்களில் நாடு முழுவதும் 35 தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் 507 குண்டுவெடிப்புகளை நடத்தியுள்ளதாகவும் அதில் 487 பொது மக்கள் கொல்லப்பட்டும் ஆயிரத்து 49 பேர் காயமடைந்தும் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ. அரசு மீதான சைபர் தாக்கு: காரணம் ரஷ்யா அல்ல சீனா - ட்ரம்ப்



அமெரிக்க அரசாங்கம் மீதான சைபர் தாக்குதலுக்கு காரணம் ரஷ்யா அல்ல சீனாவே என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்க அரசின் முக்கிய துறைகளையும் பல தனியார் நிறுவனங்களையும் குறிவைத்து பல மாதங்களாக சைபர் தாக்குதல் நடந்து வந்ததை அமெரிக்க அதிகாரிகள் அண்மையில் கண்டுபிடித்தனர்.

இந்த சைபர் தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா இருப்பதாக அமெரிக்க அரசின் மூத்த அதிகாரிகளும் தனியார் நிறுவனங்களும் சந்தேகம் தெரிவித்தன.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோவும் அமெரிக்க அரசு மீதான சைபர் தாக்குதலுக்கு ரஷ்யாதான் காரணம் எனக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் இதற்கு முரணான கருத்தை தெரிவித்துள்ளார். அதாவது சைபர் தாக்குதலுக்கு ரஷ்யா அல்ல சீனாதான் காரணம் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் – சைபர் தாக்குதலின் பாதிப்புகள் உண்மையில் இருப்பதைவிட போலி ஊடகங்களில் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளன. இது பற்றி எனக்கு முழுமையாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

எல்லாமே கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த நாச வேலையில் ஈடுபட்டது சீனாவாக இருக்கலாம். ரஷ்யா இல்லை. சீனாவின் பங்கு பற்றி விவாதிப்பதற்கு ஊடகங்கள் பயப்படுகின்றன. – எனத் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் சைபர் தாக்குதல் தொடர்பாக சீனா மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு அவர் எந்தவித ஆதாரங்களையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# பிரிட்டனில் பரவுகிறது புதுரகக் கொரோனா!

## போரிஸ் ஜான்சன் அவசர ஆலோசனை



70 சதவிகிதம் அதிக தொற்று திறன் உள்ள கொரோனா வைரஸின் புதிய வடிவம் பிரிட்டனில் பரவுவதால், பல நாடுகள் அந்த நாட்டுடனான விமான சேவைகளை நிறுத்தி உள்ள நிலையில், அது தொடர்பாக அவசர கூட்டத்தை பிரதமர் போரிஸ் ஜான்சன் நடத்தினார்.

லண்டனில் தேசிய நெருக்கடிக்கான அமைச்சரவைக் குழுவின் கூட்டத்தை கூட்டிய அவர், சர்வதேச பயணத்திற்கு பல நாடுகள் விதித்துள்ள தடை தொடர்பாகவும், அதே நேரம் பிரிட்டனுக்கு உள்ளேயும், வெளி யேயும் தொடர்ந்து சரக்கு போக்குவரத்து நடப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றி யும் விவாதித்தார்.

இதனிடையே பிரான்ஸின் தடையை தொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தெற்கு பிரிட்டனில் உள்ள முக்கிய துறைமுகமான டோவர் சரக்கு – பயணியர் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

# மார்கழி நட்சத்திரம் 2020

**கலாநிதி. தணிகைச்செல்வன் முருகதாஸ்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதிகவியற்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

இந்த மார்கழி மாதம் மாலை நேர வானில் சூரியன் மறைந்த பின்னர் தென்மேற்கு அடிவானில் நாம் இரு பிரகாசமான நட்சத்திரங்களை அவதானிக்க முடியும். தொடர்ச்சியாக அவதானித்தால் தினமும் அவை இரண்டும் ஒன்றை ஒன்று நெருங்கி வருவதை காணலாம். டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி - அதாவது இன்று - அவை இரண்டும் மிக அண்மையில் வந்து ஒரே பிரகாசமான நட்சத்திரமாக தோன்றும். இந் நிகழ்வானது கடந்த 800 ஆண்டுகளில் நடக்கும் ஓர் அபூர்வமான நிகழ்வாகும். எனினும் அதன் பின்னர் வளர் பிறை நிலவின் பிரகாசம் காரணமாக இவ்வ பூர்வ நட்சத்திரத்தை நாம் அவதானிக்க இயலாது போகும்.

இவை இரண்டும் உண்மையில் நட்சத்திரங்களே அல்ல. இரண்டிலும் பிரகாசமானது வியாழன் கோளாகும். பிரகாசம் குறைந்தது சனிக்கிரகமாகும். கோள்களும் நட்சத்திரங்கள் போன்று இரவு வானில் நமது கண்களால் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இரவு வானில் நட்சத்திரங்கள் விட்டு விட்டு ஒளிர்வதைப்போல தோன்றும். அதே வேளை கிரகங்கள் தொடர்ச்சியாக ஒளிரும் தன்மை கொண்டவை. குறிப்பாக புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி என்பன நமது வெற்றுக் கண்களால் அவதானிக்கக் கூடிய அளவு பிரகாசமானவை.

சூரிய குடும்பத்தில் உள்ள ஏதேனும் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட கோள்கள் (படம் 01 இல் காட்டியுள்ளது போல) அவற்றோடு பூமியை இணைக்கும் நேர்கோட்டில் வரும் நிகழ்வினை நாம் கிரகங்களின் கூட்டமைவு என அழைக்கலாம். இவ்வேளையில் அவ்விரு கோள்களும் பூமியின் இரவு வானில் இருக்குமாயின் அவை இரண்டும் சேர்ந்து வானில் ஒரே பிரகாசமான நட்சத்திரத்தைப் போல தோன்றும். உதாரணமாக செவ்வாய் மற்றும் சனி ஆகிய இரண்டு கோள்களும் ஒரே நேர்கோட்டில் வரும் நிகழ்வினை செவ்வாய் சனி கூட்டமைவு என அழைக்கலாம். இதேபோல சூரிய குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய இரண்டு கோள்களான வியாழன் மற்றும் சனி ஆகியவற்றின் கூட்டமைவினை நாம் மாபெரும் கூட்டமைவு (**The Great Conjunction**) என அழைக்கிறோம். வியாழன் மற்றும் சனி ஆகியன மிகவும் பெரிய கோள்களாதலால் இந்நிகழ்வானது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக கருதப்படுகிறது. வியாழன் மற்றும் சனி கோள்கள் வெவ்வேறு கதியில் சூரியனை சுற்றி வருவன. அவற்றின் சுற்றிவரும் வேகங்களுக்கு அமைவாக இவை இரண்டும் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமிக்கு ஒரே நேர்கோட்டில் வரும். வியாழன், சனி ஆகியன இரண்டும் வெற்றுக் கண்களால் அவதானிக்கக் கூடிய அளவு பிரகாசமானவை. இவ்விரண்டு கோள்களும் மிக அண்மையில் இருக்கும் பொழுது மிகவும் பிரகாசமான ஒரே நட்சத்திரமாக தோற்றமளிக்கும் இவ்வரிய நிகழ்வே நாம் 2020 டிசெம்பர் 21 ஆம் திகதி இன்று இரவு வானில் காணப் போகும் மார்கழி நட்சத்திரமாகும்.



படம் - 01

படம் 01: 2019 மற்றும் 2020 டிசெம்பர் 21ம் திகதிகளில் பூமியில் இருந்து பார்க்கும் போதான சனி மற்றும் வியாழன் கோள்களின் அமைப்பு (படம்: **NASA/ JPL**)



படம் - 02

இவ்விரண்டு கிரகங்களையும் சூரியன் மறைந்த பின் வருகின்ற முதல் 45 நிமிடங்களுக்கு நம் வெற்றுக் கண்களால் அவதானிக்க முடியும். 2020ஆம் ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையான 20 நாள்களும் இவ்விரண்டு கோள்களும் அண்மையில் நெருங்கி வந்து பின்னர் விலகிச் செல்வதையும் நாம் பூமியிலிருந்து வெற்றுக் கண்களால் அவதானிக்க முடியும் (படம் 02). டிசெம்பர் 21ஆம் திகதி (இன்று) இவ்விரு கோள்களும் மிக அண்மையில் வரும். எனினும் அவை சரியான நேர்கோட்டில் வராது. மிகச்சிறிய அளவான (0.1 பாகை) ஒரு விலகலோடு இருக்கும். அத்தோடு ஒரு தொலைக்காட்டி ஊடாக அவதானிக்கும் பொழுது வியாழன் மற்றும் சனி கோள்கள் மற்றும் அவற்றின் துணை கோள்களையும் நாம் ஒரே பார்வை கோணத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான எல்லா கூட்டமைவுகளையும் நாம் வெற்றுக்கண்களால் அவதானிக்க முடியாது. கூட்டமைவு கோள்கள் பகல் வானில் இருக்குமாயின் அவற்றை நாம் காண முடியாது. கடைசியாக 2000 ஆண்டு வைகாசி மாதம் நிகழ்ந்த வியாழன் - சனி கூட்டமைவு வெற்றுக் கண்களால் அவதானிக்க முடியாத ஒரு நிகழ்வாகும். கடைசியாக கி.பி. 1623 இல் நிகழ்ந்த மாபெரும் கூட்டமைவே வெற்றுக்கண்களால் அவதானிக்க முடிந்த கடைசி மாபெரும் கூட்டமைவாகும். எனினும் இதன் பிரகாசம் மிகவும் குறைவாகவே இருந்தது. அவ்வாறு நோக்குகையில் 2020 கூட்டமைவானது 1226 மார்ச் மாதம் நிகழ்ந்த கூட்டமைவுக்கு பின்னர் நிகழ்கின்ற முதலாவது வெற்றுக்கண்களால் அவதானிக்க கூடிய பிரகாசமான நிகழ்வாகும். அதாவது இம்முறை நிகழும் இக்கூட்டமைவு கடந்த 794 ஆண்டுகளில் நிகழும் முதலாவதும் பிரகாசமானதுமான நிகழ்வாகும். அந்த வகையிலேயே 2020 கூட்டமைவு முக்கியத்துவம் பெறுகிறது.

> இந்நிகழ்வானது விண்வெளியில் நிகழும் பல்லா யிரக்கணக்கான நிகழ்வுகளில் மிகச்சாதாரண மான ஒரு நிகழ்வாகும். இதனோடு தொடர்புபட்ட வெளிவரும் வதந்திகள் உண்மையானவை அல்ல. குறிப்பாக டிசெம்பர் 21 இற்கு அடுத்துவரும் ஆறு நாள்கள் பூமியில் வெளிச்சமற்ற நாள்களாக அல்லது இருட்டாகவே இருக்கும் எனப்படுவது மிகவும் நகைப்புக்குரிய ஒரு தகவல் ஆகும்.

இந்நிகழ்வானது விண்வெளியில் நிகழும் பல்லாயிரக்கணக்கான நிகழ்வுகளில் மிகச்சாதாரணமான ஒரு நிகழ்வாகும். இதனோடு தொடர்புபட்ட வெளிவரும் வதந்திகள் உண்மையானவை அல்ல. குறிப்பாக டிசெம்பர் 21 இற்கு அடுத்துவரும் ஆறு நாள்கள் பூமியில் வெளிச்சமற்ற நாள்களாக அல்லது இருட்டாகவே இருக்கும் எனப்படுவது மிகவும் நகைப்புக்குரிய ஒரு தகவல் ஆகும். ஏனெனில் வியாழன், சனி என்பன பூமியிலிருந்தும் சூரியனிலிருந்தும் மிகவும் தொலைவில் அமைந்திருக்கும் கோள்களாகும்.

படம் 02: டிசெம்பர் 21 2020, தெளிவான மேற்கு வானில் சனி வியாழன் கோள்களின் கூட் டமைவின் தோற்றம் (படம்: **NASA/JPL- Caltech**)

பூமியானது இருளில் ஆழ வேண்டும் எனில் நிகழக்கூடிய ஒரே சந்தர்ப்பம் சூரிய ஒளி பூமியை அடைவதை ஏதேனும் ஒரு விண்பொருள் தடுக்க வேண்டும். அதற்கு அந்த விண்பொருளானது பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வரவேண்டும். வியாழன் மற்றும் சனி ஆகிய இரண்டு கிரகங்களும் பூமியை மற்றும் சூரியனிலிருந்து மிகவும் தொலைவில் இருப்பதால் அவை இரண்டும் பூமியிலிருந்து சூரியனிலிருந்து பூமிக்கு வரும் ஒளியை தடுப்பதற்கு எந்த ஒரு சாத்தியமும் இல்லை. பூமிக்கு மிக அருகில் இருக்கும் சந்திரன் இடையில் வரும்போது கூட அதிகபட்சமாக சில நிமிட நேரமே அதுவும் பூமியின் ஒரு பகுதி மட்டுமே இருளில் மூழ்கும்.

திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ள இயேசு பாலன் பிறந்த இடத்துக்கு வழி காட்டிய பெத்தலகேம் நட்சத்திரம் கூட ஒரு வெள்ளி, வியாழன் கூட்டமைவாக (**venus Jupiter conjunction**) இருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்நிகழ்வானது கி.மு. இரண்டாம்ஆண்டு மார்கழி மாதம் 25 ஆம் திகதி இரவு பாபிலோனில் இருந்து பார்கையில் பெத்தலகேமை நோக்கிய திசையில் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஜோதிட ரீதியில் இந்நிகழ்வை நோக்கினால் நாம் அறிந்து கொள்ளக் கூடிய ஒரே விடயம் இவ்வருடம் நிகழ்ந்த வியாழன் மற்றும் சனி கிரகங்களின் பெயர்ச்சி ஆனது ஒரே இலக்கத்தில் இருப்பதை காணலாம். கூட்டிணைவு நிகழும் அதே நேரம், இரண்டு கோள்களும் ராசி வட்டத்தின் மகர ராசியில் இருக்கும். சோதிடம் என்பது கோள்களின் இயக்கத்தை மிகவும் துல்லியமாக கணிக்க வல்லது. சோதிடம் என்பது விஞ்ஞான முறையாக ஏற்றுக்கொள்ளப்படாவிடினும் இவ்வாறான பாரம்பரியமான வானியல் அறிவு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தொடர்ச்சியான அவதானிப்பு மற்றும் அறிவு பரிமாற்றம் என்பவற்றால் மட்டுமே சாத்தியமாகி இருக்க முடியும்.

வருகின்ற நாள்களில் மாலை வேளையில் சூரியன் மறைந்த பின்னர் வருகின்ற முதல் 45 நிமிடங்களுக்குள் நாம் இவ்வரிய நிகழ்வினை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இம்முறை தவற விட்டால் இதே போன்ற ஒரு நிகழ்வை அவதானிப்பதற்கு நாம் இன்னுமொரு 800 ஆண்டு வரையோ அல்லது அதற்கும் மேலாகவோ காத்திருக்க வேண்டி வரலாம்.

எனவே வதந்திகளை நம்பாது இவ்வரிய நிகழ்வினை நமது கண்களால் அல்லது வசதிப்படுபவர்கள் தொலை நோக்கி உதவியுடன் கண்டு மகிழ்வோம்.

படங்கள் உசாத்துணை:

**Website of NASA Jet propulsion laboratory, https://www.nasa.gov/feature/the - great - conjunction - of - jupiter - and - saturn**




# ஏயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தின் 31 ஊழியர்களுக்கு கொரோனா உறுதி!

கட்டுநாயக்கவில் உள்ள இலங்கை ஏயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தின் 31 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கடந்த ஞாயிற்றுக்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மிகார எபா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடத்தப்பட்ட 324 பி.சி.ஆர்.சோதனைகளிலேயே இந்த ஊழியர்கள் குழு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இலங்கை ஏயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தின் மீதமுள்ள ஊழியர்களை உடனடியாக பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் வைத்தியர் மிகார எபா கூறினார்.

இதேவேளை வத்தளையில் அமைந்துள்ள சூப்பர் மார்க்கெட்டில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் குழு சீதுவயில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஏழு பேருக்கு கொரோனா தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக சீதுவ நிர்வாக பொது சுகாதார ஆய்வாளர் சுரேஷ் குமார கூறினார்.

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 1,652 பேர் இதுவரையில் கைது!



தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டனர் என இதுவரையில் 1,652 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு :-

கொழும்பு வடக்கு மற்றும் மத்திய கொழும்பு பகுதிகளில் ஒன்பது பொலிஸ் பிரிவுகளும், நாடளாவிய ரீதியில் பல கிராமசேவகர் பிரிவுகள் மற்றும் சில வீதி ஒழுங்குகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பகுதிகளில் வசிப்பவர்கள் மட்டுமன்றி நாடுபூராகவும் உள்ள அனைவருமே வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக உரிய சுகாதார சட்டவிதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளில் முக்கிய விடயமாக காணப்படும் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை தொடர்பில் ஞாயிறு காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 1,652 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் இது தொடர்பான சோதனை நடவடிக்கைகள் கிடைக்கப்பெற்று வருவதால் அனைவரும் அந்த ஒழுங்குவிதிகளைப் பின்பற்றவேண்டும்.

தற்போது பண்டிகை காலம் என்பதால் மக்கள் வீட்டை விட்டு வெளியேறும் சந்தர்ப்பங்களில், வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவது மட்டுமல்ல, தங்களது பெறுமதியான பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதிலும் கவனம்செலுத்த வேண்டும். இதேவேளை வீதி விபத்துகளுக்கு இலக்காகாத வகையிலும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.



# மீன்பிடிக்கப் புறப்பட்ட விசைப் படகு சென்னை காசிமேட்டில் எரிந்து நாசம்



சென்னை காசிமேட்டில், விசைப் படகு, டீஸல் எந்திரத்தில் ஏற்பட்ட கோளாறால் தீப்பற்றி எரிந்து நாசமானது. பூஜை போட்டு விட்டு விசைப்படகை இயக்கியபோது, எஞ்சின் மோட்டாரில் ஏற்பட்ட பழுதினால் தீப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

விசைப்படகில் 6 ஆயிரத்து 500 லிற்றர் டீசல் இருந்த நிலையில், டீசல் குழாய் விரிசல் ஏற்பட்டு எரிபொருள் கசியத் தொடங்கியதால் தீ மளமளவென பற்றி எரியத் தொடங்கியுள்ளது.

ராயபுரத்தில் இருந்து நான்கு தீயணைப்பு வாகனங்களில் வந்த தீயணைப்புத் துறையினர், சுமார் இரண்டு மணிநேரத்திற்கு பிறகு தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

படகின் மதிப்பு இந்தியப் பணத்தில் சுமார் 60 லட்சம் என்று கூறப்பட்டது. அதைத் தயார்படுத்தியதற்கு செலவிட்ட தொகை, ஐஸ்கட்டிகள், டீசல், உணவுப்பொருள்கள் என 75 லட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

# கொரோனா தடுப்பூசியை போடுமாறு அரசு மக்களைக் கட்டாயப்படுத்தாது

## மத்திய அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தகவல்



கொரோனா தடுப்பூசி போட விருப்பம் இல்லாதவர்களிடம், போட்டே தீர வேண்டும் என அரசு வற்புறுத்தாது என்று மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்த அவர், அடுத்த மாதம் தடுப்பூசி தயாராகி விடும் என்பதால், தடுப்பூசி போடும் திட்டத்திற்காக பெருமளவில் பணியாளர்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்றனர் எனக் கூறினார்.

தடுப்பூசியின் பாதுகாப்பு அம்சங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பிறகே அதற்கு அனுமதி வழங்கப்படும் என்ற அவர் ஜனவரி மாதத்தின் எந்த வாரத்திலும் தடுப்பூசி போடும் பணி தொடங்கும் என்றார்.

# பிரிட்டன் விமானங்களுக்கு தடை விதித்தது இந்தியா!

## புதிய வகை கொரோனா வைரஸ் அங்கு மிக வேகமாகப் பரவுவதால்

புதுடெல்லி,டிசெ.21

புதிய வகை கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதால் பிரிட்டன் விமானங்களுக்கு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இந்தியா தடை விதித்துள்ளது.

இங்கிலாந்தில்தான் உலகிலேயே முதன்முதலில் கொரோனாத் தடுப்பூசிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு வந்தது. முன்கள பணியாளர்களுக்கும், முதியவர்களுக்கும் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. இதனிடையே இங்கிலாந்தில் புதியவகை கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவது அந்த நாட்டு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நிலையில் வைரஸ் பரவல் காரணமாக வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள தலைநகர் லண்டன், கிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் மீண்டும் முழு ஊரடங்கு அமுலுக்கு வருவதாக பிரதமர் போரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார்.

அதேபோல், பிரிட்டனில் இருந்து வரும் விமானங்களுக்கு பல ஐரோப்பிய நாடுகள் தடை விதித்தன. இதையடுத்து, இந்தியாவும் பிரிட்டன் விமானங்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்று டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், பிரிட்டனில் இருந்து வரும் அனைத்து விமானங்களும் இந்தியா வர நாளை (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை கடற்படையைக் கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கைக் கடற்படையினரைக் கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் நடத்தி வரும் தொடர் வேலைநிறுத்தம் ஏழாவது நாளாக நீடிக்கிறது.

மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி இன்று ராமேஸ்வரம் பஸ் நிலையம் முன்பு விசைப்படகு மீனவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் கண்டண ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கை கடற்படையால் கைதான மீனவர்களையும் பறிமுதல் செய்த படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த செவ்வாய்கிழமை வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கினர். இன்று ஏழாவது நாளாக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. இதனால் 600 க்கும் மேற்பட்ட பெரிய படகுகள் கடலுக்குச் செல்லாமல் ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத் தப்பட்டுள்ளன.

இதனிடையே கைதான ராமேஸ்வரம் மீனவர்கள் 29 பேரை இலங்கையில் யாழ்ப்பாணம் மீன்வளத் துறை அதிகாரிகள் ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதி முன்பு ஆஜர்படுத்தினர். வரும் 18ஆம் திகதி வரை மீனவர்களை காரைநகர் கடற்படை முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. மீனவர்கள் அனைவரும் அவர்களது விசைப்படகில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை கடற்படையின் தொடர் கைது நடவடிக்கையை கண்டித்தும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் விசைப்படகுகளை விடுதலை செய்ய வலியுறுத்தியும் ராமேஸ்வரம் பஸ் நிலையம் எதிரே சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள், விசைப்படகு உரிமையாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மீனவர்கள் கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்ததை கண்டித்து மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். மேலும் கச்சத்தீவை உடனடியாக மீட்டு தமிழக மீனவர்கள் பிரச்சினை இல்லாமல் கடலில் மீன்பிடிக்க வழிவகை செய்ய வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

தமிழக மீனவர்கள் கைது நடவடிக்கையை இலங்கை அரசு கைவிட வேண்டும், படகுகளை மீனவர்களுடன் உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் மீனவ பெண்கள் மற்றும் மீனவர்கள் என சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் குறைகிறது கொரோனா பாதிப்பு புதிதாக 24,337 பேருக்கு ஞாயிறன்று தொற்று




இந்தியாவில் கொரோனாவின் கொடூரம் சமீப காலமாக குறைந்து வருகிறது. தினமும் புதிதாக தொற்றுக்கு ஆளாவோரின் எண்ணிக்கையும் பலி எண்ணிக்கையும் தொடர்ந்து சரிந்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 24,337 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை ஒரு கோடி 55 ஆயிரத்து 560 ஆக அதிகரித்துள்ளது. அதேபோல், தொற்று பாதிப்பால் இன்று ஒரே நாளில் 333 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 810 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் இன்று ஒரே நாளில் 25,709 பேர் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டநிலையில், கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 96 லட்சத்து ஆறாயிரத்து 111 ஆக உயர்ந்துள்ளது. மேலும் கொரோனாத் தொற்றுக்குள்ளான 3மூன்று லட்சத்து மூவாயிரத்து 639 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இதுவரை 16 கோடி 20 லட்சத்து 98 ஆயிரத்து 329 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் புள்ளி விவரம் கூறுகிறது. இந்தியா முழுவதும் நேற்று மட்டும் 9 லட்சத்து 134 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 22.12.2020 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08 விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09 விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06 விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 அரசியல் விஞ்ஞானம் (த) |

கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1978.04.24
மதம் - இந்து K
நட்சத்திரம் - விசாகம் 2
செவ் - ------
பாவம் - 20 1/4
கல்வி - A/L
தொழில் - -------
எதிர்பார்ப்பு - படித்த பெண்

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1991.03.13
மதம் - இந்து V
நட்சத்திரம் - அவிட்டம் 1
பாவம் - 28
செவ் - 08இல்
கல்வி - கனடா பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - கனடாவில் மணமகன் தேவை.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528



# நீதி தொடர்பாகக் கதைப்பதற்கு சுமந்திரனுக்கு அருகதை கிடையாது

## பத்மநாதன் கருணாவதி காட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுமந்திரனுக்கு, நீதி தொடர்பில் கதைக்க எந்த அருகதையும் கிடையாது என வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் பத்மநாதன் கருணாவதி மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த காலங்களில் கூட்டமைப்பினர், இலங்கை அரசை அனைத்துலக விசாரணையில் இருந்து காப்பாற்றி, ஐ.நாவில் கொலையாளிகளை நீதிபதிகளாகச் சித்திரித்து, உள்ளக விசாரணைகளுக்கு ஆதரவு வழங்கி, அதற்கான கால அவகாசத்தை கொடுத்து, முற்று முழுதாகப் பேரினவாத அரசை பாதுகாத்தமை யாவரும் அறிந்ததே.

தற்போது இதே கூட்டமைப்பு, கோட்டா அரசை பாதுகாக்கும் நோக்குடன் மீண்டும் காலக்கெடு எனும் வாசகத்துடன் உயர் மட்ட தலைவர்களைச் சந்தித்துள்ளனர்.

மேலும், கடந்த தேர்தலில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தக் கூடிய இரண்டு பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்துள்ளனர்.

சர்வதேச அரங்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக கூட்டமைப்பு எந்த ஒரு தீர்மானமும் எடுக்க நாம் சம்மதிக்கப் போவது இல்லை. அவ்வாறு கூட்டமைப்பு, ஜெனிவாக்கு முண்டி அடித்துக்கொண்டு செல்வதாக இருந்தால் நாம் கடும் நடவடிக்கையை சர்வதேச அளவில் எடுப்போம்.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுமந்திரனுக்கு, நீதி தொடர்பில் கதைக்க எந்த அருகதையும் கிடையாது.

அதுமட்டுமன்றி தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தம்மைக் காட்டிக் கொண்டிருந்தவர்களின் நிலைப்பாடு, தற்பொழுது மக்கள் மற்றவர்களை தேர்ந்தெடுத்த தன் மூலமாக உடைக்கப்பட்டு இருக்கின்றது.

இனிமேல் தமிழ் மக்கள் சார்பில் முடிவு எடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது என்கின்ற நிதர்சனத்தை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளருக்கு மீண்டும் பி.சி.ஆர்.!

அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளரிடம் பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் திங்கட்கிழமை மீண்டும் பெறப்பட்டுள்ளன.

அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளரிடம் கடந்த 16ஆம் திகதி, பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பபட்டன. பரிசோதனை முடிவில் அவருக்கு வைரஸ் தொற்று ஞாயிறு உறுதியானது.

இந்நிலையிலேயே அவர் மீண்டும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் அக்கரபத்தனை பிரதேச சபை மற்றும் தலாவக்கலை – லிந்துலை நகரசபை ஆகியன திங்கள் முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

வைரஸ் தொற்று என உறுதிப்படுத்தப்பட்ட தவிசாளர், பல நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளார். அதில் ஆளுங்கட்சி பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்த நிலையில், முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே அவர் பல இடங்களுக்கு சென்றுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

# விஷப்பாம்பு தீண்டி குழந்தை உயிரிழப்பு!

## மட்டு. வாகரையில் துயரம்

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அதிகஷ்டப் பிரதேசமான கட்டுமுறிவு குளத்தில் வசிக்கும் நான்கு வயது குழந்தை விஷப்பாம்பு கடித்து உயிரிழந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் ஒரு குடிசை வீட்டில் குறித்த குடும்பத்தினர் வசித்து வந்த நிலையில் நேற்று அதிகாலை வேளையில் விஷப்பாம்பு குழந்தையைத் தீண்டியுள்ளது.

இதைப் பெற்றோர் கண்ட நிலையில் 20 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கதிரவெளி வைத்தியசாலைக்கு இரவோடிரவாக மழை காரணமாக போக்குவரத்துத் தடைப்பட்டு இருந்தபோதும் அதனையும் தாண்டி குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் அது உயிரிழந்துள்ளது.

சடலம் கதிரவெளி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கட்டுமுறிவு குளம் கிராமமானது மிகவும் பின்தங்கிய கிராமமாகும். அது மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் புறத்தில் உள்ளது. அங்கு நிரந்தரமான ஒரு மருத்துவ சிகிச்சை நிலையம், மருத்துவ உதவி எதுவும் இல்லை.

விஷப்பாம்பு, காட்டு யானைத் தாக்குதல், காட்டு மிருகங்கள் தாக்குதல் என்பன இடம்பெற்றாலும் சிகிச்சை பெறுவதற்கு மக்கள் பல சிரமத்தின் மத்தியில் 20 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கதிரவெளி வைத்தியசாலைக்கு வர வேண்டிய நிலைமை உள்ளது.

அதுபோன்று பல சிரமத்தின் மத்தியில் கர்ப்பிணித் தாய்மார் சிகிச்சைக்காக கதிரவெளி வைத்தியசாலை மற்றும் வாகரை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

மருத்துவ அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி நிரந்தர வைத்தியசாலை அமைத்துத் தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சுகிர்தனின் வாகனம் தாக்கு; ஒருவர் பொலிஸாரால் கைது!

வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்திரம் சுகிர்தன் பயணித்த அலுவலக வாகனம் மற்றும் சாரதி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் பயணித்த வாகனத்தை மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள், வழி மறித்து தாக்குதலை மேற்கொண்டமையுடன் சாரதியையும் தாக்கி விட்டுத் தப்பி சென்றனர்.

இந்த சம்பவம் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) மாலை, கீரிமலைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இளவாலை சேந்தாங்குளம் பகுதியில் வெள்ளநீர் வடிந்தோடும் வாய்க்காலை வெட்டும் நடவடிக்கையை கண்காணித்து விட்டு திரும்பிய வேளையிலேயே, தவிசாளரின் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.



இந்த விடயம் தொடர்பாக, தவிசாளரினால் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இளவாலை வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர். மேலும் சந்தேகநபரை, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சிவில் உடையில் பஸ்களில் பயணிக்கின்றனர் பொலிஸார்!

## ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவிப்பு

400 பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையில் பஸ்களை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பஸ்களின் தனிமைப்படுத்தல் சட்டம் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பது தொடர்பிலும் சாரதிகளின் நடத்தை தொடர்பிலும் ஆராய இந்த அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இதனையடுத்து, கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை ஆயிரத்து 652 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2020 இல் வெளியிடப்பெற்றது.